# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.23/2025** |
| Prosecution Witness : | **LW - 1 / PW - 1** |
| Name : **ஆனி மேரி சுவர்ணா** | Taluk : |
| D/ | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **14.11.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தலைமை செயலகத்தில் உள்துறை மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை இணை செயலாளராக பணியாற்றி வருகிறேன். 22.05.2023 முதல் 2024 வரை நான் அரியலூர் மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்தேன். மண்டல துணை வட்டாட்சியரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்டு. 1ம் எதிரியாக உள்ள சரவணன் என்பவர் அப்பொழுது மண்டல துணை வட்டாட்சியராக உடையார்பாளையம் வட்டம் ஜெயங்கொண்டத்தில் பணிபுரிந்தார். அவரை பணிநீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு. ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 2 (c) ன் படி 1ம் எதிரி பொது ஊழியர். 20.12.2023 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் இயக்குநரகத்திலிருந்து திரு.சரவணன் மண்டல துணை வட்டாட்சியர் உடையார்பாளையம் வட்டம் ஜெயங்கொண்டம் என்பவர் மீது வழக்கு தொடர அனுமதி கேட்டு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் குற்ற எண்.2/2023 சட்ட பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் வழக்கு கோப்புகள் முதல் தகவல் அறிக்கையின் நகல், சாட்சிகளின் வாக்குமூலங்கள், எதிரியின் வாக்குமூலம் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அத்துடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த

ஆவணங்களை நான் பெற்று கவனமாக பரிசீலனை செய்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திருமதி.கவிதா காவல் ஆய்வாளர் என்பவர் எனது வேண்டுகோளின் படி 11.03.2024 அன்று இவ்வழக்கின் அசல் ஆவணங்களுடன் ஆஜரானார். முதல் தகவல் அறிக்கை நகல், சாட்சிகளின் வாக்குமூலங்கள், 1ம் எதிரியின் வாக்குமூலம், ஒப்படைப்பு மகசர், கைப்பற்றுதல் மகசர், பிணாப்தலின், பகுப்பாய்வு அறிக்கை மற்றும் சில ஆவணங்களையும் படித்து பார்த்து சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டேன். இவ்வழக்கு ஆவணங்களில் என் முழு மனதையும் செலுத்தி மனதிருப்தியுற்று திரு.சரவணன் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 7 ன் கீழ் வழக்கு தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் அவர் மீது உரிய நீதிமன்றத்தில் வழக்கு தொடர 02.05.2024 அன்று இசைவாணை வழங்கினேன். அந்த இசைவாணை ஊழல் தடுப்பு சட்டம் 19 (1) (c) பிரிவின் கீழ் என்னால் வழங்கப்பட்டது. அது தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த இசைவாணை **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வழக்கறிஞர் வரவில்லை என்று சொன்னார். எனவே, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.